ஓம் சரவணஜோதியே நமோ நம

**ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்**

27.11.2025

1. கருமவினை வெல்ல தரும வழிகளை
கருணை கொண்டருளிய வேலவா
ஆறுமுக அரங்கனும் உன்பதம் பற்றி
அவதாரம் கொண்டேன் உன் ஆசிபட

2. ஆசிபட பிரணவக் குடில் படைத்து
அன்னதானம் எனும் மகா சேவையை
நேசம்பட நடத்தியே கலியினில் மக்கட்கு
நற்கதி தன்னை வழங்கி வர

3. வருகவே இன்று அருட்சுவடி வழி
விசுவாவசு தேள் திங்களுக்கான
ஈராம் குருவார அருளாசி தன்னை
இனிதே அரங்கன் யானும் அருளுவேன்

4. அருளவே பிரணவக் குடிலதனில்
அன்னதான சேவை வழியில்
தருமப்பணி ஆற்றுபவரெல்லாம்
தவராஜன் என் பிள்ளைகளப்பா

5. அப்பனே அவர்கட்கு குறை வாரா
அரங்கனும் காத்து நிற்பேன்
தப்பாமல் தொண்டர்கள் வாழ்வில்
தனமுடை ருண ரோகம் அணுகா

6. அணுகா பாதுகாப்புத் தந்து
அவர்கட்கு சத்ரு ஜெயமும்
ஞானவழிகளில் நல்ல தேற்றமும்
நற்குடியாக அவர்கள் வாழ்வு சிறக்கவும்

7. சிறக்கவும் அரங்கன் அருள்வேன்
சிறப்பான நிர்வாகம் தன்னை
அறத்தின் பலமாக நடத்திவர
அன்பர்கள் மனம் அறிய வகை செய்து

8. செய்துமே தேவைகள் பூர்த்திபட
சீடர்கள் அனைவருக்கும் நிறைவு
அய்யமற நிகழும்படி அருள்வேன்
அன்னதானம் தடைபடா தொடர

9. தொடரவே பொருளாதார பலமும்
தொண்டர்கள் படை பெருக
தடைகளின்றி பிரணவக்குடில் நோக்கி
தனவான்கள் வருகை கூட்டுவேன்

10. கூட்டியே தாராள நிதி வரவும்
கொடுக்கவும் தருமம் வளர்க்கவும்
தட்டாமல் அரங்கன் அருள்வேன்
தவமாக என்தடம் வந்து மக்கள்

11. மக்கள் தானதரும வழிகளில்
மனமுவந்து பொருளுதவி செய்து
ஆக்கமுடன் செயல்பட கலியினில்
அரங்கன்என் ஆசிபட யாவரும் தேறுவர்
அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி